
# சட்டமும் நீங்களும்

# ( LAW AND YOU )

## இல்லத்து வன்முறை தடுப்புச் சட்டம்

## ( LAW OF PREVENTION OF DOMESTIC VIOLENCE )




USAID
FROM THE AMERICAN PEOPLE

CPPHR
Centre for the Promotion and Protection of Human Rights

மனித உரிமைகள் மேம்பாட்டிற்கும் பாதுகாப்பிற்குமான நிலையம்,
இல.238,உட்துறைமுக வீதி,
திருகோணமலை.

# முகவுரை

சட்டம் சமூகத்தில் ஒரு முக்கிய இடத்தை வகிக்கின்றது. எனவே பொதுமக்கள் ஒவ்வொருவரும் அவர்களது நாளாந்த வாழ்க்கையுடன் தொடர்புபட்ட சட்டம் பற்றி அறிந்திருக்க வேண்டியது அவசியமாகும். சட்டம் சமூகத்தின் காவலனா? என்பது பொதுவாக பலராலும் முன்வைக்கப்படுகின்ற ஒரு வினாவாகும். இதற்கான பதிலை ஆம் அல்லது இல்லை என்று கூறுவது பொருத்தமானதாக அமையமாட்டாது. "திருடன் தானாக திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது" எனும் கூற்றின் அர்த்தத்தை நாம் விளங்கிக்கொண்டால், "சட்டம் சமூகத்தின் காவலனா? எனும் வினாவுக்கான பதில் என்ன என்பதை நாம் தீர்மானித்துக் கொள்ள முடியும்.

சட்டத்தை மக்கள் மீறி செயற்படுகின்ற சந்தர்ப்பங்களில் பிணக்குகளும் அமைதியற்ற சூழ்நிலைகளும் ஏற்படுவதுடன், மனித உயிர்களுக்கும் உடமைகளுக்கும் பாதிப்புக்கள் ஏற்படுவதையும் மற்றும் மனிதனுக்கு உடல், உளநலப் பாதிப்புக்கள் ஏற்படுவதையும் நாம் நாள்தோறும் அவதானிக்க முடிகிறது. எனவே நாம் ஒவ்வொருவரும் சட்டத்தை மதித்து செயற்படுவதன் மூலம் சட்ட ஒழுங்கை அமுல்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குவோமாயின் அது மக்களிடையே அமைதியையும் சமாதானத்தையும் நிலை நிறுத்துவதுடன், ஒட்டு மொத்த சமுதாயத்திற்கும் நன்மை பயப்பதாகவும் அமையும்.

நீதிமன்றத்தின் முன் வரும் எந்தவொரு நபரும், தான் "குறித்த சட்டம் பற்றி அறிந்திருக்கவில்லை" என்ற வாதத்தை முன்வைப்பாராயின் அதனை நீதிமன்றம் ஏற்றுக்கொள்ள மாட்டாது. எனவே சாதாரண பாமர மக்கள் முதல் படித்தவர்கள் வரை அனைவரும் தமது நாளாந்த வாழ்வுடன் தொடர்புடைய விடயங்கள் தொடர்பான சட்டம் பற்றிய அறிவை பெற வேண்டியது அவசியமானதாகும். இதனை செயற்படுத்துவதற்கு ஏதுவாக சாதாரண உரைநடையிலான சட்ட விளக்கங்கள் அடங்கிய சிறு கைநூல்கள் மக்களுக்கு கிடைக்கச் செய்யும் நோக்கில் இத்தகைய சிறு சட்ட கைநூல்களை தொடர்ச்சியாக வெளிக்கொண்டு வரும் நோக்கத்துடன் "சட்டமும் நீங்களும்"

**( LAW AND YOU )** என்ற கருப்பொருளை அடிப்படையாக கொண்டு எமது நிறுவனத்தின் முதலாவது கைநூலை "இல்லத்து வன்முறை தடுப்பு சட்டம்" எனும் தலைப்புடன் வெளிக்கொணர்வதில் நாம் பெரு மகிழ்ச்சி அடைகின்றோம்.

மேலும் இச் செயற்பாட்டிற்கு நிதி அனுசரணை வழங்கிய **USAID** நிறுவனத்திற்கு இச்சந்தர்ப்பத்தில் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்து கொள்கின்றோம்.

மனித உரிமைகள் மேம்பாட்டிற்கும்
பாதுகாப்பிற்குமான நிலையம்,
உட்துறைமுக வீதி,
திருகோணமலை.

දිසා විනිසුරු නිල කාමරය
மாவட்ட நீதிபதியின் உத்தியோகபூர்வ அறை
District Judge's Chamber
026 2222480

රෙජිස්ට්‍රාර්
பதிவாளர்
Registrar
026 - 2222293

දිසා අධිකරණය ත්‍රිකුණාමලය
மாவட்ட நீதிமன்றம், திருகோணமலை
District Court of Trincomalee.

දිසා විනිසුරු නිල නිවස
மாவட்ட நீதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலம்
District Judge's Bungalow
026 2222288

---

මගේ අංකය
எனது இல
My No.

ඔබේ අංකය
உமது இல
Your No.

දිනය
திகதி
Date. 2010.12.08

# அணிந்துரை.

சட்டமும் நீங்களும் என்ற தலைப்பில் எழுதப்பட்ட இச்சிறு கைநூல் இல்லத்து வன்முறைகள் பற்றி பொதுமக்களை தெளிவுபடுத்தும் வகையில் எழுதப்பட்டுள்ளது. தற்காலத்தில் பெருகிவரும் இல்லத்து வன்முறைகளை முளையிலேயே கிள்ளியெறிந்து, குடும்பங்களிடையே ஏற்படக்கூடிய பாரிய குடும்பப் பிரச்சனைகளை தடுத்து நிறுத்தும் வகையில் பொது மக்களை அறிவூட்டும் வகையில் நல்ல விடயங்களை இலகுவான தமிழில் தந்துள்ளார். சட்டத்தரணி இரா.திருக்குமரநாதன் அவர்கள், மக்களின் அன்றாடப்பிரச்சனைகளில் ஒன்றான குடும்பத்து வன்முறைகள் விவாகரத்து வரை செல்லாமல் அக்குடும்பங்களின் நலன்கள் பேணப்படும் வகையில் ஆக்கப்பட்ட இச்சட்டத்தின் நோக்கம் மக்களை இலகுவாகச் சென்றடைய எடுக்கப்பட்ட இம்முயற்சி மிகவும் வரவேற்கத் தக்கதும், பாராட்டக் கூடியதுமாகும்.

அடிக்கடி நாங்கள் பத்திரிகைகளிலும், வானொலியிலும், தொலைக்காட்சிகளிலும் கேட்கின்ற பார்க்கின்ற விடயமான கணவன்மார் மனைவிமாரை தாக்குவதைத் தடுப்போம் என்ற தொனிப்பொருளுக்கு அமைவாகவும், பெண்களுக்கு எதிரான வன்முறைகளை எதிர்ப்போம் என்ற தொனிப்பொருளுக்கு அமைவாகவும் அவற்றுக்குரிய சட்ட ஏற்பாடுகளை சட்டத்தரணி இச்சிறுநூலில் அழகாக விபரித்துள்ளார். இத்தகைய ஆக்கங்கள் மேலும் மக்களின் விழிப்புணர்வுகளுக்காக எழுதப்பட வேண்டும் என எதிர்பார்க்கின்றேன்.

கா.தட்சணாமூர்த்தி.
மாவட்ட நீதிபதி,
திருகோணமலை.

# இல்லத்து வன்முறை தடுப்புச் சட்டம் (LAW OF PREVENTION OF DOMESTIC VIOLENCE)

இல்லத்து வன்முறைகள் ஆரம்பத்தில் ஒரு சில குடும்பங்களில் மட்டும் பிரிவுகளையும் தாக்கங்களையும் ஏற்படுத்துகின்றன. ஆனால் காலப்போக்கில் இது ஒட்டு மொத்த சமுதாயத்துக்கும் பாரதூரமான பாதிப்புக்களை ஏற்படுத்துவதாக அமைந்துவிடுகின்றன. இலங்கையில் அனேகமான குடும்பங்களில் இல்லத்து வன்முறைகள் காணப்படுகின்ற போதிலும் இப் பிரச்சனை அதிகளவில் வெளிக்கொணரப்படாமையின் காரணமாக இது சமுதாயத்தில் நிலவுகின்ற பாரதூரமான பிரச்சனைகளில் ஒன்றாக பலராலும் நோக்கப்படுவதில்லை. இல்லத்து வன்முறையானது பொருளாதார வசதி குறைந்த மற்றும் கல்வியறிவு குறைந்த குடும்பங்களிலேயே அதிகளவில் காணப்படுகின்ற போதிலும், மறு புறத்தில் பொருளாதாரத்திலும் கல்வியறிவிலும் மேம்பட்ட குடும்பங்களிலும் கூட இப் பிரச்சனை காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இல்லத்து வன்முறை இடம்பெறுவதற்கு பல விடயங்கள் அடிப்படைக் காரணங்களாக அமைகின்றன. முதன்மை காரணங்களாக வறுமை, கல்வியறிவு இன்மை, குடும்ப அங்கத்தவர்கள் மதுவுக்கு இயைபாகுதல் மற்றும் மற்றவர்களின் உணர்வுகளை மதிக்காமை என்பவற்றை கொள்ளலாம். குடும்ப அங்கத்தவர் ஒருவர் மற்றவரின் உணர்வுகளையும் உரிமைகளையும் மதிக்காத நிலை காணப்படும் போது இது குடும்பத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இல்லத்து வன்முறை ஏற்படுகின்ற போது, அது அந்த இல்லத்தை சார்ந்த குடும்ப அங்கத்தவர்களின் உணர்வுகளை பாதிப்பதன் மூலம் அவர்களின் ஆளுமை வளர்ச்சியில் பெரும் தாக்கத்தை செலுத்துவதோடு அவர்களின் உடல் மற்றும் உளநலனிலும் கடுமையான பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றது. மறுபுறத்தில் இத்தகைய வன்முறை அக்குடும்பத்தை சார்ந்த சிறுவர்களின் கல்விசார் நடவடிக்கைகளில் தாக்கத்தை ஏற்படுத்துவது மட்டுமல்லாது அவர்களது உளநலனிலும் கடுமையான பாதிப்பை ஏற்படுத்துகின்றது. இதன் மூலம் ஒரு சமுதாயத்தின் எதிர்காலச் சந்ததி பாரதூரமான தாக்கத்திற்கு உள்ளாகின்றது.

எது எவ்வாறாக இருப்பினும் இல்லத்து வன்முறையானது தற்காலத்தில் சட்டத்தினால் தடைசெய்யப்பட்ட ஒரு செயலாக கருதப்படுவதுடன், இல்லத்து வன்முறைக்கு உள்ளானவர்கள் சட்டரீதியாக நிவாரணம் அல்லது பொருத்தமான பரிகாரங்களை நீதிமன்றத்தின் மூலமாகப் பெறுவதற்கான சட்ட ஏற்பாடுகளும் காணப்படுகின்றது.

மேற்சொல்லப்பட்ட காரணங்களே 2005 ஆம் ஆண்டின் 34ம் இலக்க இல்லத்து வன்முறை தடுப்புச் சட்டத்தின் ( **PREVENTION OF DOMESTIC VIOLENCE ACT NO: 34 OF 2005** ) தோற்றத்திற்கு அடிப்படையாக அமைந்தன. இலங்கைப் பாராளுமன்றினால் நிறைவேற்றப்பட்ட பல முன்னேற்றகரமான சட்டங்களுள் 'இல்லத்து வன்முறை தடுப்புச் சட்டம்' முக்கியமான ஒன்றாகும். இச்சட்டமானது 2005ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 03ம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.

இச்சட்டத்தின் முதன்மை நோக்கமானது, எந்த வடிவத்திலுமான குடும்ப வன்முறைச் செயல்களைத் தடுப்பதுடன் மற்றும் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர் விளைவான செயற்பாடுகளையும் தடுப்பதே ஆகும். குடும்பப் பெண்களுக்கு எதிரான வன்முறைச் செயல்களைத் தடுப்பதற்காகவே இச்சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதாகப் பொதுவாகக் கருதப்படுகின்ற போதிலும், இச்சட்டத்தின் நோக்கமானது குடும்ப ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், குழந்தைகள், முதியோர் அனைவருக்கும் எதிரான வன்முறைகளையும் தடுப்பதேயாகும். எனவே இச்சட்டமானது ஆண் பெண் சமத்துவத்தை பேணுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தியப் பாராளுமன்றத்தினால் "இல்லத்து வன்முறையில் இருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம் ( **THE PROTECTION OF WOMEN FROM DOMESTIC VIOLENCE ACT NO: 43 OF 2005** ) 2005ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் அறிமுகப்படுத்தபட்டது. இச் சட்டம் "இல்லத்து வன்முறையில் இருந்து பெண்களை மட்டும் பாதுகாக்கும்" நோக்கமாக கொண்டு செய்றபடுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

அடுத்து வரும் பந்திகளில் இல்லத்து வன்முறை தடுப்புச் சட்டத்தின் முக்கியமான ஏற்பாடுகள் பற்றி கேள்வி--பதில் வடிவத்திலான ஒரு கண்ணோட்டம். இல்லத்து வன்முறைகள் தடுப்புச் சட்டம் இதனகத்து பின்னர் இ.வ.த.சட்டம் என விபரிக்கப்படுவதுடன் குறிப்பிடவும் படுகின்றது.

இல்லத்து வன்முறை என்றால் என்ன?

இல்லத்து வன்முறை என்பது குடும்ப உறுப்பினர்களில் ஒருவர் இன்னொரு உறுப்பினர் மீது அல்லது குடும்பத்தை சார்ந்த ஒருவர் மீது வீட்டுச் சூழலில் அல்லது வீட்டு சூழலுடன் தொடர்புடைய வெளிச்சூழலில் புரியப்பட்டதும் அல்லது விளைவிக்கப்பட்டதுமான உடல் ரீதியான அல்லது உள ரீதியான தாக்கத்தை ஏற்படுத்தும் தவறொன்றை புரிதல் அல்லது அத்தகைய தவறான செயலை புரிவதற்கு முயற்சி செய்தல் இல்லத்து வன்முறையாக கருதப்படுகின்றது.

இ.வ.த.சட்டம் பிரிவு **23.**

இல்லத்து வன்முறைச் சட்டத்தின் கீழ் தவறொன்றாக கருதப்படும் செயல்கள் யாவை?

இல்லத்து வன்முறைச் சட்டத்தின் கீழ் தவறொன்றாக கருதப்படும் செயல்களாக பின்வரும் பௌதீகரீதியான தவறுகள் மற்றும் உளரீதியான தவறுகளும் உள்ளடங்குகின்றன.

இ.வ.த.சட்டம் பிரிவு **23** மற்றும் "அட்டவனை - **1**".

I. இலங்கை தண்டனைச் சட்டக்கோவையின் 16வது அத்தியாயத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள தவறுகள் மேற்சொல்லப்பட்ட சூழலில் புரியப்படும் போது அவை இல்லத்து வன்முறைச் செயல்களாகக் கருதப்பட முடியும்.

II. வன் பறி -- இலங்கை தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவு 372.

III. குற்ற அச்சுறுத்தல் -- இலங்கை தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவு 483.

IV. பின்வரும் உள ரீதியான செயற்பாடுகள் இல்லத்து வன்முறையாக கருதப்பட முடியும். ஒருவரது மனநிலையில் பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய விதத்தில் இன்னொருவர் பின்வரும் செயல்களை செய்தல:

- மனிதாபிமானமற்ற செய்கை
- கீழ்த்தரமான நடத்துகை
- வார்த்தை பிரயோகங்களின் மூலம் துன்புறுத்தல்

V. மேற்சொல்லப்பட்ட தவறுகளில் ஏதேனும் ஒன்றை செய்ய முயற்சித்தல்.

இல்லத்து வன்முறை தடுப்புச் சட்டம் செயற்படும் சூழல் யாது?

வன்முறையானது வீட்டிற்குள் வீட்டுடன் தொடர்புபட்ட வெளிச்சூழல் மற்றும் பாதிக்கப்பட்டவருக்கும் பாதிப்பை ஏற்படுத்தியவருக்குமிடையில் குடும்ப உறவுமுறை காணப்படுகின்ற போது.

இ.வ.த.சட்டம் பிரிவு 23.

இல்லத்து வன்முறை தடுப்புச் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நீதிமன்றத்தை நாடக்கூடிய சந்தர்ப்பங்கள் எவை?

இல்லத்து வன்முறை ஒன்று நடைபெற்றிருக்கும் போது அல்லது நடைபெறும் போது அல்லது அவ்வாறு நடைபெற கூடிய சாத்தியமுள்ள போது நீதிமன்றத்திற்கு விண்ணப்பத்தினை சமர்ப்பித்து தேவையான நிவாரணங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். இல்லத்து வன்முறை ஒன்று ஏற்கனவே நடைபெற்றிருக்கும் போது நீதிமன்றிற்கு செல்லும் நோக்கமானது அத்தகைய வன்முறை எதிர்காலத்திலும் ஏற்படாதவாறு தடுப்பதேயாகும்.

இ.வ.த.சட்டம் பிரிவு 2(1).

இல்லத்து வன்முறை தொடர்பான நிவாரணம் பெறுவதற்கு எந்த நீதிமன்றிற்கு செல்ல வேண்டும்?

- நீதவான் நீதிமன்றிற்கு செல்ல வேண்டும்.

இல்லத்து வன்முறை யாருக்கு எதிராகப் புரியப்பட்டுள்ளதோ, அவர் தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக குடியிருக்கின்ற பிரதேசத்தில் அமைந்துள்ள அல்லது இல்லத்து வன்முறை இடம்பெற்ற அல்லது இடம்பெற சாத்தியமுள்ள பிரதேசத்தில் அமைந்துள்ள நீதவான் நீதிமன்றிற்கு செல்ல வேண்டும்.

இ.வ.த.சட்டம் பிரிவு 2(3).

இல்லத்து வன்முறை தடுப்புச் சட்டத்தின் கீழ் நீதிமன்றின் மூலம் நிவாரணம் பெறுவதற்கு விண்ணப்பம் செய்வதற்கு தகுதியுடையவர்கள் யார்?

- வன்முறையினால் பாதிக்கப்பட்ட நபர் அல்லது பாதிக்கப்பட்ட அவன் அல்லது அவள் சார்பாக பொலிஸ் அலுவலர்
- பாதிக்கப்பட்ட நபர் சிறுவராக இருக்கும் போது (வயது 18 இற்கு குறைவாக இருக்கும் போது) சிறுவரின் சார்பில் சட்டம் அனுமதிக்கும் நபர்.

இ.வ.த.சட்டம் பிரிவு 2(2).

பாதிக்கப்பட்ட சிறுவர் சார்பில் யார் நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்க முடியும்?

- சிறுவர் சார்பாக பொலிஸ் அலுவலர் ஒருவர்
- சிறுவரின் சட்ட ரீதியான பாதுகாவலர்
- சிறுவர் வசிக்கும் இல்லத்தை சார்ந்த நபர்
- 1998ம் ஆண்டின் 50ம் இலக்க சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் எழுத்தில் அனுமதியளிக்கப்பட்ட நபர்

இ.வ.த.சட்டம் பிரிவு 2 ஆ (iii).

இல்லத்து வன்முறை தொடர்பாக நீதிமன்றின் மூலம் நிவாரணத்தை பெறக்கூடிய நபர்கள் என்ற வரைவிலக்கணத்தினுள் மேலும் உள்ளடக்கப்படுபவர்கள் யார்?

- கணவன் மனைவி என்ற உறவுமுறை இருக்கும் எந்தவொரு வாழ்க்கை துணையும்
- முன்னய கணவன் மனைவி என்ற அந்தஸ்தை கொண்டிருக்கும் எந்தவொரு நபரும்
- திருமணம் செய்யாமல் சேர்ந்து வாழும் வாழ்க்கை துணைவரில் எவரேனும் ஒருவர்
- இல்லத்து உறவுமுறையில் காணப்படும் பின்வருவோர்கள்
    - தாய், தகப்பன் , பாட்டி , பாட்டன் , சின்னம்மா , சிற்றப்பா
    - மகன் , மகள் , பேர்த்தி , பேரன் , பெறாமகள் , பெறாமகன்
    - சகோதரன் , சகோதரி , உடன்பிறவா சகோதரன் , உடன் பிறவா சகோதரர்
    - சகோதரன் சகோதரியின் பிள்ளைகள்.

இ.வ.த.சட்டம் பிரிவு **23.**

நீதிமன்றில் விண்ணப்பம் செய்யும் போது விண்ணப்பத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் எவை?

- வன்முறைக்கு உள்ளாகியவரின் பெயரும் (மனுதாரர்) முகவரியும்
- வன்முறையை புரிந்தவரின் பெயரும் (எதிர்மனுதாரர்) முகவரியும்

- ஏற்கனவே இடம்பெற்ற, தற்போது இடம்பெற்றுக் கொண்டிருக்கின்ற அல்லது எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய வன்முறை பற்றி சுருக்கமாக குறிப்பிடல் வேணடும்.

- எத்தகைய நிவாரணம் தேவைப்படுகின்றது என்பது குறிப்பிடப்படல் வேண்டும்.

- நிவாரணம் கோரும் போது இடைக்கால கட்டளையாகவும் ( Interim Order ) மற்றும் பாதுகாப்பு கட்டளையாகவும் ( Protection Order ) நிவாரணம் வழங்கும் படி குறிப்பிட முடியும்.

- எத்தகைய பாதுகாப்பு கட்டளை தேவைப்படுகின்றது என்பதை விண்ணப்பத்தில் நிவாரணமாக தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

விண்ணப்பத்தின் இரண்டு பிரதிகள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். இ.வ.த.சட்டம் பிரிவு 2(3).

விண்ணப்பத்துடன் வேறு ஏதாவது ஆவணங்கள் இணைக்கப்படல் வேண்டுமா?

- இல்லை. வன்முறை தொடர்பாக பொலிசில் ஏற்கனவே முறைப்பாடு செய்யப்பட்டால் அதன் பிரதியை இணைப்பது பொருத்தமானது.

- இல்லத்து வன்முறைக்கு உள்ளாகியவரின் சத்திய கடதாசி.

- இடம்பெற்ற வன்முறையை நேரடியாக அறிந்தவர்களின் சத்திய கடதாசி.

- விண்ணப்பத்துடன் மேற்சொல்லப்பட்ட ஆவணங்கள் கட்டாயமாக இணைக்கப்பட வேண்டியதில்லை. ஆனால் இடைக்காலக் கட்டளை போன்ற நிவாரணததைப் பெறுவதற்கு இவை போதுமான சான்றாக அமையும்.

  இ.வ.த.சட்டம் பிரிவு 2(4).

நீதிமன்றில் விண்ணப்பம் செய்வதற்கு முன்பதாக இல்லத்து வன்முறை தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ய வேண்டிய கட்டாய தேவைப்பாடு ஏதேனும் உள்ளதா?

அவ்வாறான கட்டாய தேவைப்பாடு எதுவும் இல்லை. ஆனால் இல்லத்து வன்முறையானது கடுமையான தவறுகள் கொண்டதாக இடம்பெற்றிருப்பின் அது தொடர்பில் உடனடியாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்வது விரும்பத்தக்கதாகும். ஏனெனில் அத்தகைய முறைப்பாட்டின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியை விண்ணப்பத்துடன் இணைத்து நீதிமன்றிற்கு சமர்ப்பிக்கும் போது அது இடைக்கால பாதுகாப்பு கட்டளையை பெறுவதற்கு உதவியாக இருக்கும்.

நீதிமன்றத்தின் முன் விண்ணப்பம் ஒன்று கிடைக்கப் பெற்றதும், நீதிமன்றினால் நடைமுறைப்படுத்தப்படும் செயற்பாடுகள் என்ன?

1. விண்ணப்பத்தை கவனத்தில் எடுத்தல்.

இல்லத்து வன்முறை தொடர்பான முறைப்பாடு அடங்கிய விண்ணப்பமொன்று நீதிமன்றில் கிடைக்கப் பெற்றவுடன் அவ் விண்ணப்பத்தில் உள்ளடங்கப்பட்டுள்ள விடயங்களை நீதிமன்றம் கவனமாக பரிசீலனைக்கு எடுத்தல் வேண்டும். இ.வ.த.சட்டம் பிரிவு 3.

நீதிமன்றம் அவ்விண்ணப்பத்தை பரிசீலித்து குறித்த இல்லத்து வன்முறை தொடர்ந்து இடம்பெறுவதனை உடனடியாக தடுக்க வேண்டிய தேவை காணப்படின் அல்லது பாதிக்கப்பட்டவருக்கு உடனடியாக பாதுகாப்பு வழங்கப்பட வேண்டிய தேவை காணப்படின், நீதமன்றானது உடனடியாகவே மனுதாரரின் சாட்சியத்தை பதிவுசெய்து அதன் மூலம் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்களை உறுதிப்படுத்திக்கொண்டு தேவையான இடைக்கால பாதுகாப்பு கட்டளை ஒன்றை ஆக்க முடியும். இத்தகைய இடைக்கால பாதுகாப்பு கட்டளையானது, குறித்த முறைப்பாடு தொடர்பான இறுதி விசாரணை முடிவடைந்து இறுதிக் கட்டளையொன்று ஆக்கப்படும் வரை செயற்பாட்டில் இருக்கும். இ.வ.த.சட்டம் பிரிவு 4(அ).

## 11. இடைக்கால கட்டளை (Interim Order).

இடைக்கால கட்டளை **(Interim Order)** பிறப்பிக்கப்பட்டதும் நீதிமன்றம் பின்வரும் நடபடிமுறைகளை மேற்கொள்ள வேண்டும்.

- விண்ணப்ப திகதியிலிருந்து 14 நாட்களுக்கு உட்பட்ட தினமொன்றிற்குள் விண்ணப்பம் விசாரணைக்காக நியமிக்கப்படல் வேண்டும்.

- எதிர்மனுதாரருக்கு எதிராக பாதுகாப்பு கட்டளை ஒன்று ஏன் பிறப்பிக்கப்படக் கூடாது என்பதற்கான காரணத்தை காட்டுவதற்காக, குறித்த விசாரணை தினத்தில் மன்றில் ஆஜராகும் படி அறிவுறுத்தப்பட்டு எதிர்மனுதாரருக்கு அழைப்புக் கட்டளை அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

- குறித்த அழைப்புக் கட்டளையும் குறித்த விண்ணப்பம் தொடர்பாக இடைக்கால கட்டளை வழங்கப்பட்டிருப்பின் அதன் பிரதியும் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

- எதிர்மனுதாரரிடம் குறித்த அழைப்புக் கட்டளை நேரடியாக சேர்ப்பிக்க முடியாமல் போகும் பட்சத்தில் அவர் வழமையாக வசிக்கும் இடத்தில் அவருக்கு தென்படும் விதத்தில் ஒட்டப்படுவதற்கான அறிவுறுத்தல் வழங்கப்படல் வேண்டும்.

- இடைக்கால கட்டளையை தொடர்ந்து பாதிக்கப்பட்ட தரப்பினரின் நலன் கருதி அவருக்கு ஆலோசனை வழங்கும் படி சமூக சேவை அலுவலருக்கு / குடும்ப ஆலோசனை அலுவலருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட முடியும்.

- பாதிக்கப்பட்ட நபருக்கு பாதுகாப்பு வழங்க வேண்டிய தேவை உள்ளதென கருதும் பட்சத்தில் குறித்த கட்டளையில், பாதிக்கப்பட்ட நபருக்கு எத்தகைய பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பது விபரமாக குறிப்பிடப்பட்டு இடைக்கால கட்டளை வழங்கப்படல் வேண்டும்.

- இடைக்கால கட்டளை வழங்கும் போது நீதிமன்றமானது ஏதாவது குடும்ப வன்முறை செயல்கள் புரிவதிலிருந்து

அல்லது எதிர்காலத்தில் புரியப்படுவதிலிருந்து எதிர்மனுதாரரை தடைசெய்யும் கட்டளையை பிறப்பித்தல் வேண்டும்.

- மேலும் நீதிமன்றம் இ.வ.த.சட்டத்தின் பிரிவு 11(1) உப பந்திகள் "அ" தொடக்கம் "ஔ" வரையில் குறித்துரைக்கப்பட்ட வேறு ஏதேனும் தடையை அல்லது நிபந்தனையை நீதிமன்றம் இடைக்கால கட்டளையில் உள்ளடக்கலாம்.

- முன்சொல்லப்பட்டவாறாக நீதிமன்றம் இடைக்கால கட்டளையில் தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளை மற்றும் தடைகளை இடுகின்ற போது அவை சரியான முறையில் செயற்படுத்தப்படுகின்றனவா என்பதனை கண்காணித்து மன்றிற்கு அறிக்கையொன்றை சமர்ப்பிக்கும் படி சமூக சேவை அலுவலருக்கு, குடும்ப ஆலோசகரொருவருக்கு, நன்னடத்தை பாதுகாவல் அலுவலரொருவருக்கு, குடும்ப சுகாதாரப் பணியாளரொருவருக்கு அல்லது சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலரொருவருக்கு கட்டளையிடலாம்.

- இவ்வாறான இடைக்கால கட்டளையானது, (Interim Order}, நீதிமன்றத்தினால் பாதுகாப்புக் கட்டளை ( Protection Order ) வழங்கப்படும் வரையில் அல்லது அத்தகைய இடைக்காலக் கட்டளை நீக்கப்படும் வரையில் நடைமுறையில் இருக்கும்.

இ.வ.த.சட்டம் பிரிவு 5.

## III. விசாரணை:

- பாதுகாப்பு கட்டளை ( **Protection Order** ) ஒன்று வழங்கப்படல் வேண்டுமா என்பதனை தீர்மானிப்பதற்கு நீதிமன்றினால் விசாரணை ஒன்று நடாத்தப்படல் வேண்டும்.

- அவ்வாறாக விசாரணைக்கென நியமிக்கப்பட்ட தினத்தில் எதிர்மனுதாரர் நீதிமன்றுக்கு சமூகமளிக்கத் தவறி இருப்பின் மன்றின் அழைப்புக் கட்டளையானது எதிர்மனுதாரருக்கு சேர்ப்பிக்கட்டுள்ளதென நீதிமன்றம் திருப்திப்படும் பட்சத்தில்

எதிர்மனுதாரரின் சமூகம் இன்றி குறித்த விண்ணப்பத்தை நீதிமன்றம் கவனத்தில் எடுத்து, பாதுகாப்பு கட்டளை ( **Protection Order** ) ஒன்று வழங்குவது பற்றி தீர்மானிக்க முடியும்.

- குறித்த தினத்தில் எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் சமூகமாகியிருப்பின் விண்ணப்பத்தில் கோரப்பட்ட நிவாரணங்கள் தொடர்பாக நீதிமன்றினால் இருதிறத்தவரது சமுகத்திலும் விசாரணை ஒன்று நடாத்தப்பட்டு நீதிமன்றம் பாதுகாப்பு கட்டளை ( **Protection Order** ) வழங்குவது பற்றி தீர்மானித்தல் வேண்டும்.

இ.வ.த.சட்டம் பிரிவு 6 (1) (2).

## VI. பாதுகாப்பு கட்டளை ( **Protection Order** )

- இல்லத்து வன்முறை நடைபெறுவதை தடுக்கும் பொருட்டு அல்லது எதிர்காலத்தில் அவ்வாறான வன்முறை ஏற்படுவதை தடுக்கும் பொருட்டு பாதிக்கப்பட்ட நபரின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் முகமாக பாதுகாப்பு கட்டளை ஒன்று வழங்க வேண்டும் என நீதிமன்றம் கருதுமாயின் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

- நீதிமன்றம் பாதுகாப்பு கட்டளை ஒன்றை பிறப்பித்தல் வேண்டும். மேலும் அத்தகைய பாதுகாப்பு கட்டளை பன்னிரண்டு மாதகாலத்துக்கு மேற்படாதவாறு தொடர்ந்து நடைமுறையில் இருக்கும் கட்டளையொன்று பிறப்பிக்க வேண்டும்.

- குறித்த பாதுகாப்பு கட்டளையின் பிரதி எதிர்மனுதாரர் வசிக்கும் மற்றும் பாதிக்கப்பட்டவர் வசிக்கும் பிரதேச பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

இ.வ.த.சட்டம் பிரிவு 8.

**இடைக்கால கட்டளை (Interim Order ) மற்றும் பாதுகாப்பு கட்டளை ( Protection Order) மூலம் நீதிமன்றினால் விதிக்கப்படக் கூடிய கட்டளைகள் எவை?**

பின்வரும் விடயங்கள் தொடர்பில் நீதிமன்றம் எதிர்மனுதாரரை கட்டுப்படுத்தி தடைவிதிப்பதான கட்டளையிடலாம்.

- பாதிக்கப்பட்டவரின் வசிப்பிடத்தினுள் நுழைதல்.

- வேலை செய்யுமிடம், பாடசாலை மற்றும் வணக்க ஸ்தலம் என்பவற்றிற்குச் செல்லல் அல்லது பின் தொடர்தல்

- பாதிக்கப்பட்டவரை பின் தொடர்ந்து தொல்லை கொடுத்தல்.

- பாதிக்கப்பட்டவர் தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக வசிக்கின்ற வசிப்பிடத்தினை பாதிக்கப்பட்டவருடன் பகிர்ந்து கொள்வதை அல்லது பிள்ளைகள் எவருடனும் தொடர்பு வைத்துக் கொள்ளுவதை அல்லது ஆதனங்களை பகிர்ந்து கொள்வதற்கான வாய்ப்புக்களை பெறுவதனை அல்லது திருமண இல்லத்தை விற்பனை செய்து பங்கினைப் பெறுவதனை அல்லது பாதிக்கப்பட்டவரை திருமண இல்லத்தில் இருந்து இடமாற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளல் போன்ற நோக்குடனான செயற்பாடுகளிலிருந்து எதிராளியை நீதிமன்றம் தடைசெய்யலாம்.

பாதிக்கப்பட்டவரை மேலும் அநாதரவான நிலைக்கு உள்ளாக்கும் விதத்தில் மணவாழ்க்கை இல்லத்தை விற்றல், மாற்றுதல் வேறு ஒருவருக்கு கையளித்தல் போன்றவற்றையும் அல்லது அத்தகைய செய்றபாடுகளுக்கு முயற்சிகள் மேற்கொள்வதனையும் நீதிமன்றம் தடைசெய்யலாம். இத்தகைய கட்டளையை நீதிமன்றம் வழங்கும் போது பாதிக்கப்பட்டவரின் பாதுகாப்பு உடனடித் தேவைகள், சுகாதாரம் மற்றும் நலன்புரி விடயங்கள் என்பவற்றையும் கருத்திலெடுத்து அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு ஏதுவான உரியநடபடிமுறைகளையும் வழிகாட்டல்களையும் நீதிமன்றம் பரிந்துரைத்தல் வேண்டும். இ.வ.த.சட்டம் பிரிவு 11.

இடைக்கால கட்டளை (Interim Order ) மற்றும் மற்றும் பாதுகாப்பு கட்டளை ( Protection Order) இரண்டுக்கும் இடையிலான வேறுபாடு என்ன?

இடைக்காலக் கட்டளை (Interim Order) உடனடி நிவாரணமாக வழங்கப்படுகின்றது. குறித்த வன்முறையிலிருந்து உடனடியாக பாதிக்கப்பட்டவருக்கு பாதுகாப்பு அவசியம் என நீதிமன்றம் கருதின், எதிர்மனுதாரரை விசாரிக்காமலே இத்தகைய கட்டளை வழங்கப்படமுடியும். இத்தகைய சந்தர்ப்பத்தில் நீதிமன்றம் பாதிக்கப்பட்டவரின் சாட்சியம் தேவையெனக் கருதினால் அதனை பதிவுசெய்து நிகழ்வுகளை உறுதிப்படுத்தி கொண்டதன் பின்பு இடைக்கால கட்டளையை நீதிமன்றம் பிறப்பிக்க முடியும்.

ஆனால் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இருதிறத்தவர்களினதும் மற்றும் அவர்களினது சாட்சிகளினது சாட்சியங்களும் பதிவுசெய்யப்பட்டதன் பின்பு விசாரணையின் இறுதியில் வழங்கப்படும் கட்டளை பாதுகாப்புக் கட்டளையாகும் ( Protection Order).

நீதிமன்றமானது பாதிக்கப்பட்ட நபரின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொருட்டு வேறு எத்தகைய கட்டளைகளை ஆக்க முடியும்?

- பாதிக்கப்பட்ட நபரின் பாதுகாப்பு, சுகாதாரம், கல்வி மற்றும் ஏனைய நலன்களின் பொருட்டு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என நீதிமன்று கருதும் போது அவைபற்றிய விபரங்களையும் உள்ளடக்கி பாதுகாப்பு கட்டளையை வழங்கமுடியும.

- எதிர் மனுதாரரின் உடமையில் இருந்து ஏதாவது ஆயுதங்களை கைப்பற்ற வேண்டிய தேவை இருப்பின்

- பாதிக்கப்பட்டவரின் பிள்ளைகளது பொருட்களை எதிர்மனுதாரரின் உடமையிலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டியிருப்பின்,

- பாதிக்கப்பட்டவருக்கு தற்காலிக தங்குமிட வசதியினை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டியிருப்பின், அவற்றை செயற்படுத்தும் படி பொலிசாருக்கு கட்டளையிட முடியும்.

- பாதுகாப்பு கட்டளை செயற்படுத்தப்படும் விதம் சம்பந்தமாக கண்காணிப்பு செய்யுமாறு சமூக சேவை அலுவலருக்கு அல்லது பொலிசாருக்கு கட்டளையிட முடியும்

- இரு திறத்தவரினதும் பொருளாதார நிலைமைகளை கவனத்திற்கு எடுத்து, தேவை ஏற்படின் பாதிக்கப்பட்டவருக்கு வீட்டு தேவைக்கு ஏற்றவாறாக பணக்கொடுப்பனவு ஒன்றை செய்யும் படி எதிர்மனுதாரருக்கு கட்டளை ஒன்றை செய்ய முடியும்.

- மேற்சொல்லப்பட்டவாறாக பணக்கொடுப்பனவொன்று செய்யப்பட வேண்டும் என்ற கட்டளையானது குறித்த பணக்கொடுப்பனவை பெறும் நபருக்கு 1999ம் ஆண்டு 37ம் இலக்க பராமரிப்பு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக அவருக்குள்ள உரிமைகளில் எந்தவிதமான பாதிப்பையும் ஏற்படுத்த மாட்டாது.

இ.வ.த.சட்டம் பிரிவு 11(1) (2).

இடைக்கால கட்டளையில் **(Interim Order)** அல்லது பாதுகாப்பு கட்டளையில் **(Protection Order)** கூறப்பட்ட விடயங்களை மீறி செயற்படுவதன் விளைவு என்ன?

அவ்வாறாக மீறி செயற்படின் அது தண்டனைக்குரிய குற்றமாகும் இவ்விடயம் தொடர்பாக நீதவான் முன்நிலையில் விசாரணை ஒன்று நடாத்தப்பட்டு எதிர்மனுதாரர் குற்றவாளியாக காணப்படுவாராயின் நீதிமன்றம் பின்வரும் தண்டனைகளை வழங்க முடியும்.

- ரூபா 10,000 க்கு மேற்படாத தண்டப்பணம் அல்லது
- ஒரு வருடத்திற்கு மேற்படாத சிறைத்தண்டனை, அல்லது

- தண்டப்பணம் மற்றும் சிறைத்தண்டனை ஆகிய இரண்டும் விதிக்கப்படும்
- நீதிமன்றின் கட்டளையை மீறி செயற்பட்டு தண்டனைச் சட்டக் கோவையில் விபரிக்கப்பட்ட தவறொன்றை புரிந்திருப்பாராயின் அது தொடர்பாக குற்றவியல் தவறொன்று நிருபிக்கப்படின் அது தொடர்பான தண்டனையும் வழங்கப்படும்.

இ.வ.த.சட்டம் பிரிவு 18.

இல்லத்து வன்முறை இடம்பெற்று பாதிக்கப்பட்ட நபர் பாதுகாப்பு கட்டளை **(Protection Order)** இற்கு விண்ணப்பித்திருக்கும் அதே வேளை, அதே தவறிற்காக குற்றவியல் நீதிமன்றத்தில் குற்றம் புரிந்த நபர் மீது குற்றம் சாட்டப்பட்டு தண்டிக்கப்படலாமா?

மேலே கூறப்பட்ட பௌதீகரீதியான துஷ்பிரயோகம் தொடர்பில் தண்டிக்கப்பட முடியும். பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்து போதுமான சான்றுகள் இருந்தால் அவர் குற்றவியல் நீதிமன்றத்தில் தண்டிக்கப்பட முடியும் ஏனெனில் பௌதீகரீதியான துஸ்பிரயோகம் தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் வருகின்ற குற்றவியல் தவறுகளாகவே காணப்படுகின்றது. எனவே இதே தவறுகளுக்காக குற்றவியல் வழக்கு மட்டுமல்லாது குடியியல் வழக்கும் சம்பந்தப்பட்ட நபருக்கு எதிராக தாக்கல் செய்யப்படலாம்.

இ.வ.த.சட்டம் பிரிவு 21.

தாபரிப்பு சட்டத்தின் கீழ் ஏற்கனவே வழக்கொன்று நடைமுறையில் இருக்கும் போது, இல்லத்து வன்முறைகள் தடுப்புச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வேறு ஒரு வழக்கு தாக்கல் செய்ய முடியுமா?

சம்பந்தப்பட்ட திறத்தவருக்கிடையில் ஏற்கனவே தாபரிப்பு சட்டத்தின் கீழ் வழக்கொன்று நடைமுறையில் இருப்பினும் கூட இல்லத்து வன்முறை தடுப்புச்சட்டத்தின் கீழ்

தடைசெய்யப்பட்ட தவறு எதுவும் புரியப்பட்டிருப்பின் பிறிதொரு வழக்கொன்று தாக்கல் செய்யப்படலாம்.

இ.வ.த.சட்டம் பிரிவு 12(2).

நீதிமன்ற விசாரணையின் போது பாதிக்கப்பட்ட நபரிடம் நேரடியாக கேள்வி கேட்பதற்கு எதிர்மனுதாரருக்கு சந்தர்ப்பம் வழங்கப்படுமா?

- எதிர்மனுதாரர் சார்பில் சட்டத்தரணி ஒருவர் தெரிபடும் சந்தர்ப்பங்களில் கேள்வி கேட்பதற்கு சட்டத்தரணிக்கு முடியும்.

- சட்டத்தரணி ஒருவர் தெரிபடாவிட்டால் பாதிக்கப்பட்டவரிடம் அல்லது சாட்சியிடம் நேரடியாக கேள்வி கேட்க வேண்டாம் என கட்டளையிட நீதிமன்றிற்கு முடியும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் வினாக்களை நீதவானிடம் சமர்ப்பித்து நீதவான் அவ்வினாக்களை பாதிக்கப்பட்டவரிடம் அல்லது சாட்சியிடம் வினாவுவார்.

இவ் ஏற்பாடுகள் ஏற்படுத்தப்பட்ட காரணம், எதிர் மனுதாரரினால் பாதிக்கப்பட்ட நபருக்கு அல்லது சாட்சியிடம் நேரடியாக கேட்பதன் மூலம் அவர்கள் அச்சுறுத்தப்படுவதை தவிர்ப்பதற்காகவே

இ.வ.த.சட்டம் பிரிவு 6(2).

பாதுகாப்பு கட்டளையொன்று மாற்றுப்படலாமா அல்லது இரத்துச் செய்யப்படலாமா?

ஆம், நீதிமன்றமானது அவ்வாறு செய்வதைத் தேவைப்படுத்துகின்றவாறாக சூழ்நிலைகள் மாற்றமடைந்துள்ளன என திருப்தியடைந்தால், பாதுகாப்புக் கட்டளையொன்றை மாற்றலாம், திரிபுபடுத்தலாம்,

வேறுபடுத்தலாம் அல்லது இரத்துச் செய்யலாம். அத்தகைய கட்டளையானது பாதிக்கப்பட்ட ஆளினால் அல்லது எதிர் மனுதாரரினால் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றின் மீது மாற்றப்படலாம் அல்லது இரத்துச் செய்யப்படலாம். பிள்ளையொன்றின் சார்பாக விண்ணப்பமொன்று செய்யப்படுகின்ற சூழ்நிலைகளில் அக்கட்டளை மாற்றப்படுவதற்கு அல்லது இரத்துச் செய்யப்படுவதற்கு முன்னர் அந்த விண்ணப்பமானது சுதந்திரமாகவும் தன்னிச்சையாகவும் செய்யப்பட்டுள்ளதா என்பதையிட்டு நீதிமன்றம் திருப்தியடைதல் வேண்டும். அக்கட்டளையானது திரிபுபடுத்தப்பட, வேறுபடுத்தப்பட அல்லது இரத்துச் செய்யப்பட முன்னர் பாதிக்கப்பட்ட ஆள் மற்றும் எதிர் மனுதாரர் ஆகிய இருவரையும் நீதிமன்றம் விசாரித்தல் வேண்டும்.

இ.வ.த.சட்டம் பிரிவு 14(1).

நீதவான் நீதிமன்றின் கட்டளைக்கெதிராக மேன்முறையீடு ஒன்று செய்வதற்கான உரிமை உண்டா?

ஆம், நீதவான் நீதிமன்றமொன்றால் ஆக்கப்பட்ட கட்டளையொன்றில் திருப்தியடையாத ஆளொருவர் மேல் நீதிமன்றத்திற்கு மேன்முறையீடொன்றைச் செய்யலாம். ஆயினும் மேன் முறையீடு ஒன்றைச் செய்யும் போது, மேல் நீதிமன்றம் வேறுவிதமாகத் தீர்மானித்தாலன்றி நீதவானால் வழங்கப்பட்ட கட்டளையொன்றின் செயற்பாடானது இடைநிறுத்தப்பட மாட்டாது.

இ.வ.த.சட்டம் பிரிவு 17.

பாதிக்கப்பட்டவருக்கு வீட்டு தேவைக்கு பணக்கொடுப்பனவு செய்யும் படி எதிர்மனுதாரருக்கு கட்டளையிடப்படின் அது எவ்வளவு காலத்திற்கு செயற்பாட்டிலிருக்கும்?

பாதுகாப்புக்கட்டளையின் செயற்பாடடுக்காலமான 12 மாதகாலப் பகுதிக்கே செயற்பாட்டிலிருக்கும். கொடுப்பனவை எதிர்மனுதாரர் செலுத்தத் தவறியதன் மேல், எதிர்மனுதாரரின்

தொழில்தருநரை, நீதிமன்றம் கட்டளையிட்டிருக்கக்கூடிய நிதி நிவாரணத்தை செலுத்துவதற்கு ஏதுவாக, எதிர்மனுதாரருக்கு வருமதியான ஊதியத்தின் ஒரு பாகத்தை அல்லது முழுமையையும் பாதிக்கப்பட்ட மனுதாரருக்கு நேரடியாகச் செலுத்துமாறு பணிக்கலாம்.

இ.வ.த.சட்டம் பிரிவு 12(3).

இலங்கை தண்டனைச் சட்டக்கோவையின் 16 வது அத்தியாயத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள குற்றத் தவறுகளில், இல்லத்து வன்முறைத் தவறுகளாகக் கருதப்படக்கூடியவை எவை?

- அச்சுறுத்தி ஏதேனும் ஒரு கருமத்தை செய்ய வைத்தல்
- காயம் விளைவித்தல்
- கடும் காயம் விளைவித்தல்
- சட்டரீதியற்ற விதத்தில் தடுத்துவைத்தல்
- பலாத்காரம் பிரயோகித்தல்
- குற்றமுறையான நடத்துகைகள்
- தாக்குதல்
- பாலியல் ரீதியான துன்புறுத்துகை
- பன்னிரண்டு வயதிற்குக்குட்பட்ட சிறுவரொருவரின் பாதுகாப்பில் அக்கறையின்றி இருத்தல் மற்றும் சிறுவரொருவரை கைவிடுதல்

பாதிக்கப்பட்ட நபர் ஒருவர் சட்டத்தரணி எவரையும் நியமிக்காமல் தானே நேரடியாக இல்லத்து வன்முறை தொடர்பாக நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் செய்யமுடியுமா?

ஆம். அவ்வாறாக தானே நேரடியாக விண்ணப்பம் செய்ய விரும்பும் ஒருவர் இக்கைநூலில் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்தையும் ,சத்தியக்கடதாசியையும் பார்வையிட்டு அவற்றை பின்பற்றி தங்களுக்குரிய விண்ணப்பத்தையும் சத்தியக்கடதாசியையும் தயார் செய்து நீதிமன்றத்திற்கு நேரடியாக விண்ணப்பம் செய்ய முடியும்.

இத்தகைய விண்ணப்பங்களை நீதிமன்றில் தாக்கல் செய்வதற்கு இலவச சட்டஉதவியை வழங்குவதற்கான நிறுவனங்கள் உள்ளனவா?

ஆம். திருகோணமலை மாவட்டத்தில் இத்தகைய விடயம் தொடர்பில் இலவச சட்ட உதவியை வழங்கும் நிறுவனங்கள் செயற்படுகின்றன. அத்தகைய சில நிறுவனங்களின் விபரம் வருமாறு:

1. மனித உரிமைகள் மேம்பாட்டிற்கும் பாதுகாப்பிற்குமான நிலையம்,
   இல.238,உட்துறைமுக வீதி,
   திருகோணமலை.

2. சட்ட உதவி நிலையம்,
   இலங்கை சட்டஉதவி ஆணைக்குழுவின்
   திருகோணமலை பிராந்திய நிலையம்,
   1ம் மாடி, நீதிமன்ற கட்டடத்தொகுதி.

3. சட்ட உதவி நிலையம்,
   இலங்கை சட்டஉதவி ஆணைக்குழு,
   நீதிமன்ற கட்டடத்தொகுதி,
   மூதூர்.

4. நோர்வே அகதிகள் பேரவை,
   இல. 97, தபாற்கந்தோர் வீதி, திருகோணமலை.

விண்ணப்பம் (மாதிரி – 1) :

மனு / விண்ணப்பம் :

## நீதவான் நீதிமன்றம் திருகோணமலை

2005 ம் ஆண்டின் 34 ம் இலக்க இல்லத்து வன்முறை தடுப்பு சட்டத்தின் கீழ் பிரிவு 2(1) (2) மற்றும் பிரிவு 2(3) என்பவற்றின் கீழ பாதிக்கப்பட்ட மனுதாரரினால் செய்யப்படும் விண்ணப்பம்.

சுதர்மன் திவ்யதாரணி
இல: 15/7, சுந்தரத் தமிழ் வீதி,
திருகோணமலை.

-பாதிக்கப்பட்ட மனுதாரர்-

எதிர்

பத்மன் சுதர்மன்,
இல: 25/3, சுந்தரத் தமிழ் வீதி,
திருகோணமலை.

-எதிர் மனுதாரர்-

2010ஆம் ஆண்டு ............... மாதம் ..... திகதி.

சட்டத்தரணி ஆர்.கோபிநாத் மூலம் தோற்றும் மேலே பெயர் குறிப்பிடப்பட்ட பாதிக்கப்பட்ட மனுதாரரின் மனு பின்வருமாறு கூறுகின்றது.

1. இவ் வழக்கின் திறத்தவர்கள் வசித்து வருவதும் வழக்கெழு காரணம் எழுந்திருப்பதும் இந் நீதிமன்றின் நியாயாதிக்க எல்லைக்குள் ஆகும்.

2. இவ் வழக்கின் மனுதாரர், எதிர்மனுதாரரை 1999.04.20ம் திகதி பதிவுத்திருமணம் செய்து அன்றிலிருந்து திருகோணமலை சுந்தரத் தமிழ் வீதியில் அமைந்துள்ள 25/3ம் இலக்க இல்லத்தில் கணவன் மனைவியாக தொடர்ச்சியாக வாழ்ந்து வந்தார்கள்.

(பதிவுத் திருமணச் சான்றிதழின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி "ம-1" என இலக்கமிடப்பட்டு இம் மனுவின் ஒரு பாகமாக இணைக்கப்பட்டுள்ளது).

3. மனுதாரரும், எதிர் மனுதாரரும் குடும்ப வாழ்க்கை நடாத்தி வந்ததன் மூலம் அவர்களுக்கு பெண் பிள்ளை ஒன்று பிறந்துள்ளது. அப்பிள்ளையின் விபரம் வருமாறு:

சு.ஐஸ்வர்யா - 09 வயது

(குறித்த பிள்ளையின் பிறப்பு சான்றிதழின் உண்மைப்பிரதி "ம-2" என அடையாளம் இடப்பட்டு இம் மனுவின் ஒரு பாகமாக இணைக்கப்பட்டுள்ளது).

4. எதிர் மனுதாரர் நாளாந்தம் குடி போதையில் வந்து மனுதாரரை அடித்து துன்புறுத்தியுள்ளார்.

5. இவ்வாறாக தொடர்ச்சியாக எதிர் மனுதாரர், மனுதாரரை மது போதையில் அடித்து துன்பறுத்தி மனுதாரரை குறித்த சுந்தரத் தமிழ் வீதியில் அமைந்துள்ள 25/3ம் இலக்க இல்லத்தில் இருந்து பலதடவைகள் பலாத்காரமாக வெளியேற்றியுள்ளார்.

6. எதிர்மனுதாரர், மனுதாரரை பலாத்காரமாக அடித்து துன்புறுத்தி வெளியேற்றியதன் காரணமாக மனுதாரர் கடந்த மாதம் தொடக்கம் மேலே மனுதாரரின் முகவரியாக குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் அமைந்துள்ள மனுதாரரின் தாயாரின் வீட்டில் தற்போது வசித்து வருகின்றார்.

7. எதிர் மனுதாரரின் தொடர்ச்சியான துன்புறுத்தலின் காரணமாக பாதிக்கப்பட்ட மனுதாரர், கடந்த மாதம் திருகோணமலை பொலிஸ் நிலையத்தில் தனக்கு

ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் தொடர்பாக முறைப்பாடு ஒன்றை செய்துள்ளார்.

( இம் முறைப்பாட்டின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி 'ம-3' என இலக்கமிடப்பட்டு இவ் மனுவுடன் ஒரு பாகமாக இணைக்கப்பட்டுள்ளது).

8. மனுதாரர் குறித்த சுந்தரத் தமிழ் வீதியில் அமைந்துள்ள 25/3ம் இலக்க இல்லத்திற்கு மீண்டும் செல்வதற்கு விருப்பம் கொண்டுள்ள போதிலும், அவ் இல்லத்திற்குச் சென்றால், எதிர் மனுதார் அவரை அடித்து துன்பறுத்தி அவருக்கு மரணத்தினை ஏற்படுத்துவார் என்ற அச்சத்துடன் இருக்கின்றார்.

9. எதிர் மனுதாரர் கடந்த பல மாதங்களாக மனுதாரரையும் அவரது பிள்ளையையும் பராமரிக்க தவறியுள்ளார்.

10. எதிர் மனுதாரர் மேசன் தொழில் செய்து மாதாந்தம் ரூபா 20,000/= க்கு மேற்பட்ட தொகையை உழைத்து வருகின்றார்.

11. மேலே சொல்லப்பட்ட நிகழ்வுகளின் அடிப்படையில் எதிர் மனுதாரருக்கு எதிராக இந்த வழக்கை தாக்கல் செய்து பின்வரும் நிவாரணங்களை பெறுவதற்கு மனுதாரருக்கு வழக்கெழு காரணம் எழுந்துள்ளது:

அ) எதிர் மனுதாரருக்கு எதிராக இல்லத்து வன்முறை தடுப்பு சட்டம் பிரிவுகள் 5 (I) (II) (III) ஆகியவற்றின் கீழ் இடைக்கால கட்டளையை ( **Interim Order** ) பெறுவதற்கும்,

ஆ) எதிர் மனுதாரருக்கு எதிராக வன்முறை தடுப்பு சட்டம் பிரிவுகள் 10,11,12 ஆகியவற்றின் கீழ் பாதுகாப்பு கட்டளையை ( **Protection Order** ) பெறுவதற்கும்.

12. மேலே சொல்லப்பட்ட நிகழ்வுகளை உறுதிப்படுத்தும் முகமாக, மனுதாரர் இத்துடன் தனது சத்திய கடதாசியை இணைத்துள்ளார்.

எனவே பாதிக்கப்பட்ட மனுதாரர் மன்றிடம் தாழ்மையுடன் பின்வரும் நிவாரணங்களை கோருகின்றார்:

அ) மனுதாரரும் அவரது மகளும் குறித்த சுந்தரத் தமிழ் வீதியில் அமைந்துள்ள 25/3ம் இலக்க இல்லத்திற்கு உடனடியான திரும்பிச் செல்வதற்கு தடை எதனையும் ஏற்படுத்த வேண்டாமென்று எதிர்மனுதாரருக்கு உத்தரவு இடுவதான இடைக்கால கட்டளையை இல்லத்து வன்முறை தடுப்பு சட்டம் பிரிவுகள் 5(I) (II) (III) ன் பிரகாரம் பிறப்பிக்கும் படியும்,

ஆ) மனுதாரரை அடித்து துன்புறுத்த வேண்டாமென்று எதிர் மனுதாரருக்கு உத்தரவு இடுவதான இடைக்கால கட்டளையை இல்லத்து வன்முறை தடுப்பு சட்டம் பிரிவுகள் 5 (I) (II) (III) ன் பிரகாரம் பிறப்பிக்கும் படியும்,

இ) மனுதாரருக்கும் அவரது மகளுக்கும் நாளாந்த வாழ்க்கைச் செலவைச் சமாளிப்பதற்காக மன்று தீர்மானிக்கும் பணத்தொகையை மாதாந்தம் செலுத்தும் படி எதிர்மனுதாரருக்கு உத்தரவு இடுவதான பாதுகாப்பு கட்டளையை இல்லத்து வன்முறை தடுப்பு சட்டம் பிரிவுகள் 10,11,12 ன் பிரகாரம் பிறப்பிக்கும் படியும்,

ஈ) மனுதாரரும் அவரது மகளும் கீழ் விபரிக்கப்படும் ஆதனத்தில் நிரந்தரமாக குடியிருப்பதற்கு எந்தவித தடைகளையோ, இடையூறுகளையோ ஏற்படுத்தாது இருக்கும் படி எதிர்மனுதாரருக்கு உத்தரவு இடுவதான பாதுகாப்பு கட்டளையை பிறப்பிக்கும் படியும்,

உ) மனுதாரரை எந்த விதத்திலும் துன்புறுத்த வேண்டாமென்று எதிர்மனுதாரருக்கு உத்தரவு இடுவதான பாதுகாப்புக் கட்டளையை இல்லத்து வன்முறை தடுப்பு சட்டம் பிரிவுகள் 10,11,12 ன் பிரகாரம் பிறப்பிக்கும் படியும், மற்றும்

ஊ) இம் மன்று பொருத்தமானது எனக் கருதும் ஏனைய நிவாரணங்களை வழங்கும் படியும்

..............................

மனுதாரரின் சட்டத்தரணி

சத்தியக் கடதாசி (மாதிரி – 2) :

நீதவான் நீதிமன்றம் திருகோணமலை

2005 ம் ஆண்டின் 34 ம் இலக்க இல்லத்து வன்முறை தடுப்பு சட்டத்தின் கீழ் பிரிவு 2(1) (2) மற்றும் பிரிவு 2 (3) என்பவற்றின் கீழ் பாதிக்கப்பட்ட மனுதாரரினால் செய்யப்படும் விண்ணப்பம்

சுதர்மன் திவ்யதாரணி
இல: 15/7, சுந்தரத் தமிழ் வீதி,
திருகோணமலை.

- பாதிக்கப்பட்ட மனுதாரர்-

எதிர்

பத்மன் சுதர்மன்,
இல: 25/3, சுந்தரத் தமிழ் வீதி,
திருகோணமலை.

-எதிர் மனுதாரர்-

திருகோணமலை சுந்தரத் தமிழ் வீதி, இல: 15/7ல் வசிக்கும் சுதர்மன் திவ்யதாரணி, வயது 36, இந்து மதத்தைச் சேர்ந்தவராகிய நான் உண்மையாகவும் நேர்மையாகவும் உறுதிசெய்து பின்வருமாறு வெளிப்படுத்துனராவேன்

1. நான் மேற் சொல்லப்பட்ட வெளிப்படுத்துனராவேன்.

2. நான் வசிப்பதும் வழக்கெழு காரணம் எழுந்துள்ளதும் இந்த நீதி மன்றின் நியாயாதிக்க எல்லைக்குள் ஆகும். நானும் எதிர்மனுதாரரும் 1999.04.20ம் திகதி பதிவுத்திருமணம் செய்து அன்றிலிருந்து கணவன் மனைவியாக திருகோணமலை சுந்தரத் தமிழ் வீதியில்

அமைந்துள்ள 25/3ம் இலக்க இல்லத்தில் கணவன் மனைவியாக தொடர்ச்சியாக வாழ்ந்து வந்தோம்.

(பதிவுத் திருமணச் சான்றிதழின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி "ம-1" என இலக்கமிடப்பட்டு மனுவின் ஒரு பாகமாக இணைக்கப்பட்டுள்ளது).

3. நானும், எதிர்மனுதாரரும் குடும்ப வாழ்க்கை நடாத்தி வரும் காலத்தில் எங்களுக்கு பெண் பிள்ளை ஒன்று பிறந்துள்ளது. அப்பிள்ளையின் விபரம் வருமாறு:

சு.ஐஸ்வர்யா - 09 வயது

(குறித்த பிள்ளையின் பிறப்பு சான்றிதழின் உண்மைப்பிரதி "ம-2" என அடையாளம் இடப்பட்டு இம் மனுவின் ஒரு பாகமாக இணைக்கப்பட்டுள்ளது).

4. எதிர்மனுதாரர் நாளாந்தம் மது போதையில் வந்து என்னை அடித்து தொடர்ச்சியாக துன்புறுத்தியுள்ளார்.

5. இவ்வாறாக தொடர்ச்சியாக எதிர்மனுதாரர் என்னை மது போதையில் அடித்து துன்பறுத்தியதன் மூலம் என்னை குறித்த சுந்தரத் தமிழ் வீதியில் அமைந்துள்ள 25/3ம் இலக்க இல்லத்தில் இருந்து பலதடவைகள் பலாத்காரமாக வெளியேற்றியுள்ளார்.

6. எதிர்மனுதாரர், என்னை பலாத்காரமாக அடித்து துன்புறுத்தி வெளியேற்றியதன் காரணமாக நான் கடந்த மாதம் தொடக்கம் மேலே எனது முகவரியாக குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் அமைந்துள்ள எனது தாயாரின் வீட்டில் தற்போது வசித்து வருகின்றேன்.

7. எதிர்மனுதாரர் ஆகிய எனது கணவரின் தொடர்ச்சியான துன்புறுத்தலின் காரணமாக பாதிக்கப்பட்ட நான் கடந்த மாதம் திருகோணமலை பொலிஸ் நிலையத்தில் எனக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் தொடர்பாக முறைப்பாடு ஒன்றை செய்துள்ளேன்.

(இம் முறைப்பாட்டின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி 'ம-3' என இலக்கமிடப்பட்டு மனுவுடன் ஒரு பாகமாக இணைக்கப்பட்டுள்ளது).

8. நான் குறித்த சுந்தரத் தமிழ் வீதியில் அமைந்துள்ள 23/5ம் இலக்க இல்லத்திற்கு மீண்டும் செல்வதற்கு விருப்பம் கொண்டுள்ள போதிலும், அவ் இல்லத்திற்குச் சென்றால் எதிர்மனுதாரர் என்னை அடித்து துன்பறுத்தி எனக்கு மரணத்தினை ஏற்படுத்துவார் என அச்சத்துடன் தற்போது இருக்கின்றேன்.

9. எதிர்மனுதாரர் கடந்த பல மாதங்களாக என்னையும் பிள்ளையையும் பராமரிக்க தவறியுள்ளார்.

10. எதிர்மனுதாரர் மேசன் தொழில் செய்து மாதாந்தம் ரூபா 20,000/= க்கு மேற்பட்ட தொகையை உழைத்து வருகின்றார்.

11. மேலே சொல்லப்பட்ட நிகழ்வுகளின் அடிப்படையில் எதிர்மனுதாரருக்கு எதிராக இந்த வழக்கை தாக்கல் செய்து எனது விண்ணப்பபத்தில் கோரியுள்ள நிவாரணங்களை பெறுவதற்கு எனக்கு வழக்கெழு காரணம் எழுந்துள்ளது.

12. மேலே சொல்லப்பட்டவை யாவும் எனது அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவை என இத்தால் நான் உறுதிப்படுத்துகின்றேன்.

மேற்குறித்த சத்திய ஓலையானது குறித்த வெளிப்படுத்துபவருக்கு முறையாக வாசித்துக் காண்பிக்கப்பட்டு என்னால் விளக்கம் அளிக்கப்பட்டதுடன் அவர் அதன் உள்ளடக்கங்களை நன்குவிளங்கிக்கொண்டு இதில தனது கையொப்பத்தினை 2010ம் ஆண்டு மாதம் ம் திகதி திருகோணமலையில்வைத்து இட்டுள்ளார் என உறுதிப்படுத்துகின்றேன்.

..........................................
வெளிப்படுத்துபவர்

என் முன்னிலையில்

..........................................
சமாதான நீதவான்/ சத்திய ஆணையாளர்

நீதவான் நீதிமன்றினால் பிறப்பிக்கப்படக்கூடிய இடைக்கால கட்டளை ( **INTERIM ORDER**): மாதரி – 3.

பாதிக்கப்பட்ட நபர் மன்றில் அளித்த சாட்சியங்களிலிருந்து இவ்வழக்கின் எதிர்மனுதாரர் பாதிக்கப்பட்ட நபருக்கு அச்சுறுத்தல்களையும் துன்புறுத்தல்களையும் செய்து வருவது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதால், அத்தகைய துன்புறுத்தல்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் போன்றவற்றிலிருந்து உடனடியாக மனுதாரரை பாதுகாக்க வேண்டியுள்ளதற்கான தேவை ஏற்பட்டுள்ளது என்பதையிட்டு மன்று திருப்தியடைகின்றது. எனவே எதிர்மனுதாரருக்கு எதிராக மன்று பின்வரும் கட்டளைகளை பிறப்பிக்கின்றது.

1. எதிர்மனுதாரர், பாதிக்கப்பட்ட நபருக்கு அடிப்பதை துன்புறுத்துவதை மற்றும் அச்சுறுத்துவதை மன்று தடைசெய்கின்றது.

2. பாதிக்கப்பட்டவர் குறித்த சுந்தரத் தமிழ் வீதியில் அமைந்துள்ள 15/7ம் இலக்க இல்லத்திற்கு திரும்பி வந்து குடியிருப்பதனை தடைசெய்யக் கூடாது என மன்று எதிர்மனுதாரருக்கு கட்டளையிடுகின்றது.

3. பாதிக்கப்பட்டவருக்கோ அல்லது அவரின் பிள்ளைக்கோ எந்தவித உடல்ரீதியான உளரீதியான துன்புறுத்துதல்களை மற்றும் அச்சுறுத்தல்களை செய்வதையும் மன்று தடைசெய்கின்றது.

4. மேலும் இந்த இடைக்கால கட்டளை ஏன் நிரந்தரமான பாதுகாப்பு கட்டளையாக ஆக்கப்படக் கூடாது என்பதற்கான காரணத்தை காட்டுமாறு கோரி எதிர்மனுதாரருக்கு அழைப்பாணை அனுப்பி வைக்கப்படுமாறும் மன்று கட்டளையிடுகின்றது.

5. இந்தப்பாதுகாப்பு கட்டளை இன்றிலிருந்து 14 நாட்கள் வரையில் அமுலில் இருக்க வேண்டுமெனவும், இதன் பிரதியொன்றை எதிர்மனுதாரருக்கு அனுப்பி வைக்குமாறும் மன்று கட்டளையிடுகின்றது. மேலும் இக்குறித்த இடைக்கால கட்டளையின் பிரதியை மனுதாரரின் வதிவிடம் அமைந்துள்ள பிரதேசத்தின் பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரிக்கு, கட்டளையிலுள்ள விடயங்கள் அமுல்படுத்தப்படுகின்றனவா என்பதை கண்காணிப்பதற்காக அனுப்பி வைக்குமாறும் மன்று கட்டளையிடுகின்றது.